சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - பள்ளிகள் - 2014-2015 ஆம் ஆண்டுக்கான பகுதி II திட்டம் – 6 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலை / உயர்நிலை / நடுநிலைப்பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் 612 மாணவ / மாணவியர்களுக்கு படுக்கை வசதிகள் செய்து தருதல் –ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை

அரசாணை (3ப) எண்.5 நாள் : 26.02.2015

ஜய, மாசித் திங்கள் 14 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டன :–

இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களின் கடித ந.க.எண்.பமே/ஆ1/3431/2013, நாள் 11.06.2014 மற்றும் 25.09.2014.

-------

ஆணை:

பழங்குடியின மாணவர்களின் கல்வி நலனுக்காக அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு தங்கும் வசதி நன்றாக இருந்தால் அவர்கள் தங்களது படிப்பில் மேலும் சிறப்பாக கவனம் செலுத்துவார்கள் என்பதன் அடிப்படையில் அவர்களுக்கு படுக்கை வசதி செய்து தரப்பட்டு வருகிறது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், பழங்குடியினர் நல இயக்குநர், இதுவரை 10 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிகளுக்கு அடுக்கு கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும், அதேபோல் மூன்றாவது கட்டமாக இவ்வாண்டில் 6 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலை/உயர்நிலை/நடுநிலைப் பள்ளிகளில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு படுக்கைப் பொருட்கள் வாங்கி வழங்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

3. அதன் அடிப்படையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 6 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலை/உயர்நிலை/நடுநிலைப் பள்ளிகளில் தங்கி பயிலும் 612 மாணவ, மாணவியர்களுக்கு இரண்டடுக்கு கட்டில், இரண்டு மெத்தைகள், இரண்டு தலையணைகள் மற்றும் படுக்கை விரிப்புகள் அடங்கிய ஒரு அலகு என்ற வகையில் 612

மாணவ, மாணவியர்களுக்கு 306 அலகுகள் வழங்கலாம் என்றும், ஒரு அலகின் விலை ரூ.12,455/– (ரூ.8455+4000 வாட் வரி உட்பட) ஆகும் என்றும் தெரிவித்து, அதன் அடிப்படையில் 612 மாணவ, மாணவியர்களுக்கு 306 செட் அடுக்கு கட்டில், மெத்தை, தலையணை மற்றும் படுக்கை விரிப்புகள் வாங்கி வழங்க ரூ.38,11,230/– ஒப்பளிப்பு செய்யுமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், 2014–2015 ஆம் ஆண்டிற்கான பகுதி – II திட்டத்தின் கீழ், இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 6 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலை/ உயர்நிலை/நடுநிலைப்பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் 612 மாணவ/ மாணவியர்களுக்கு, இரண்டு மாணவர் / இரண்டு மாணவியர் படுக்கக் கூடிய 306 செட் இரண்டடுக்கு கட்டில், மெத்தை, தலையணை மற்றும் படுக்கை விரிப்புகள் ஆகியவற்றை வாங்கி வழங்க ரூ.38,11,230/– (ரூபாய் முப்பத்தி எட்டு இலட்சத்து பதினொன்றாயிரத்து இருநூற்று முப்பது மட்டும்) கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது:–

(i) பகுதி II திட்டங்களுக்கு என ஒப்பளிக்கப்பட்ட தொகை மேற்கண்ட திட்டப் பணிகளுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும்.

(ii) இத்திட்டத்தில் செலவினம் போக மீதித் தொகை இருப்பின் அத்தொகை அரசு கணக்கில் உடனடியாக ஒப்புவிப்பு செய்யப்பட வேண்டும்.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 02 – பழங்குடியினர் நலன் –277– கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள்– II மாநில திட்டம் - JY – பழங்குடி இன மாணவர்கள் தங்கிப் பயிலும் நடுநிலை / உயர்நிலைப் பள்ளிகளை உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்துதல்

05 – அலுவலகச் செலவுகள் –05 அறைகலன்

| | |
|---|---|
| (த.தொ.கு. 2225 –02 –277–JY-0556) | – ரூ.25,87,230/– |
| 24–பொருட்களும் வழங்கலும்" | |
| (த.தொ.கு.2225–02–277–JY- 2401) | - ரூ.12,24,000/– |
| | --------------- |
| மொத்தம் | – ரூ.38,11,230/– |
| | --------------- |

6. மேலே பத்தி நான்கில் ஒப்பளிக்கப்பட்ட தொகையில், இரண்டு அடுக்கு கட்டில், மெத்தை, தலையணை, படுக்கை விரிப்புகள் ஆகியவை அடங்கிய ஒரு செட்டின் விலை ரூ.12,455/– (ரூ.8455+4000 வாட் வரி உட்பட) ஆகும். இதற்காக ஒதுக்கப்படும் தொகை கொண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த சட்டம் 1998, பிரிவு 16(f)–ன்படி டான்ஸி (TANSI) நிறுவனத்திடமிருந்து இரண்டடுக்கு கட்டில்களையும், மெத்தை, தலையணை மற்றும் படுக்கை விரிப்புகள் ஆகியவை

அடங்கிய செட்டினை தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளி சட்ட விதிமுறைகளைப் பின்பற்றி, கொள்முதல் செய்து சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு வழங்க பழங்குடியினர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. அவ்வாறு வாங்கி வழங்கப்பட்ட விவரத்தினை அரசுக்குத் தெரிவிக்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இவ்வரசாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் இப்பணி நிறைவேற்றப்பட வேண்டும். மேலும், இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள 6 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலை/உயர்நிலை/நடுநிலைப் பள்ளிகளில் எந்த மாற்றமும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண். 65888/ஆதி(ம)பந/2014, நாள் 03.02.2015–ல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

பெறுநர்:–
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை– 5
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5
மாவட்ட ஆட்சியர்கள், நாமக்கல், சேலம், ஈரோடு, பெரம்பலூர்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
நாமக்கல், சேலம், ஈரோடு, பெரம்பலூர்.
முதன்மை மாநிலக் கணக்காயர்,
சென்னை – 18/35/6.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை – 8.
மாவட்ட கருவூல அலுவலர், நாமக்கல், சேலம், விழுப்புரம், ஈரோடு, பெரம்பலூர்.

நகல் :–
நிதித்துறை, சென்னை 9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9
அமைச்சர்(ஆதி(ம)பந) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை 9.
இருப்புக் கோப்பு

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

தி வெங்கடேசன் [illegible]
பிரிவு அலுவலர் 26/2/15
26/2/15

## இணைப்பு

**அரசாணை (3ப) எண்.5, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 26.02.2015**

| வ. எண் | மாவட்டம் | | பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியின் பெயர் | பயன்பெறும் மாணவ/மாணவியர்கள் | வழங்கப்பட வேண்டிய கட்டில் தலையணை போர்வை செட்டுகளின் எண்ணிக்கை | கட்டில்களுக்குரிய தொகை @ ரூ.8455/– வீதம் 2225–02–277–JY-0556–ன் கீழ் விடுவிக்கப்படும் தொகை | மெத்தை தலையணை போர்வைகளுக்குரிய தொகை @ ரூ.4000/– வீதம் 2225–02–277–JY-2401–ன் விடுவிக்கப்படும் தொகை | மொத்தம் (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | நாமக்கல் | 1. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி, முள்ளுக்குறிச்சி (ஆ) | 162 | 81 | 684855 | 324000 | 1008855 |
| 2. | சேலம் | 2. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி, வெள்ளிக்கவுண்டனூர். | 110 | 55 | 465025 | 220000 | 685025 |
| 3. | ஈரோடு | 3. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளி, பர்கூர் | 90 | 45 | 380475 | 180000 | 560475 |
| | | 4. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளி, தலமலை | 100 | 50 | 422750 | 200000 | 622750 |
| | | 5. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளி, கெத்தேசல் | 100 | 50 | 422750 | 200000 | 622750 |
| 4 | பெரம்பலூர் | 6. | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, மலையாளப்பட்டி | 50 | 25 | 211375 | 100000 | 311375 |
| | | | பெருமொத்தம் | **612** | **306** | **2587230** | **1224000** | **3811230** |

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

சு. வெங்கடேசன்
பிரிவு அலுவலர் 26/2/15
26/2/15